# வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.4223/ஆ3/2022 நாள்.01.12.2023

பொருள்: பள்ளிக்கல்வி–அரசு மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற் கல்வி பாடப்பிரிவில் 11 – ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் தொழிற்கல்வி சார்ந்த நேரடி அகப்பயிற்சி (Internship) மேற்கொள்ளுதல் – சார்பு

பார்வை : தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.50510/பிடி2/இ1/2023 நாள்.20.11.2023

-----------

பார்வையில் காணும் செயல்முறைகளின் படி வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகளில் 11 –ஆம் வகுப்பில் தொழிற்கல்வி பாடப்பிரிவில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் 06.11.2023 முதல் 23.11.2023 வரையிலான நாட்களில் ஏதேனும் 10 நாட்களில் 80 மணி நேரம் தொழிற்சாலைகளுக்கு சென்று நேரடி அகப்பயிற்சி (Internship) மேற்கொள்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் ஏற்கனவே சார்ந்த பள்ளி தலைமைஆசிரியர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பயிற்சியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு வழிகாட்டும் விதமாக ஒரு அகப்பயிற்சி துணைவன் என ஒரு கையேடு ஆங்கிலவழி மற்றும் தமிழ்வழியில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் அகப்பயிற்சிக்கான நோக்கம் பயிற்சியில் அகப்பயிற்சியின் பொழுது செய்ய வேண்டியவை, மாணவர்கள் செய்யக்கூடாதவை, அகப்பயிற்சியின் அனுபவ பகிர்வுகள், அகப்பயிற்சியின் பொழுது தினமும் பூர்த்தி செய்யப்படவேண்டிய படிவங்கள் போன்றவை இடம் பெற்றிருக்கும். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள (Annexure) கையேடு ஒவ்வொரு மாணவருக்கும் நகல் எடுத்து வழங்கப்பட வேண்டும். மேலும் அகப்பயிற்சிக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய விவரங்கள்

1. அகப்பயிற்சிக்காக (Internship) சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள்/ நிறுவனங்களுக்கு 10 நாட்கள் சென்று வருவதற்கான போக்குவரத்து செலவினம் மற்றும் இதர செலவினங்களுக்காக Internship for vocational Education (VE) என்ற தலைப்பின் கீழ் மாணவர் ஒவ்வொருவருக்கும் ரூ.750/– வழங்கபடும்.
2. 40 பக்கங்கள் கொண்ட அகப்பயிற்சி துணைவன் கையேட்டினை Black and white – இல் பள்ளி மூலமாக பிரதி/ நகல் எடுத்து மாணவர்களுக்கு வழங்க Raw Material Grant தலைப்பின் கீழ் மாணவர் ஒருவருக்கு ரூ.40/– வழங்கப்படும்.

3. அகப்பயிற்சியினை வெற்றிகரமாக 10 நாட்கள் மேற்கொண்ட மாணவர்களுக்கு கல்வித்துறை சார்பாக சான்றிதழ் வழங்கப்படும். பள்ளிகள் மூலமாக சான்றிதழ் அச்சிட்டு வழங்குவதற்கான செலவினமாக Raw Material Grant தலைப்பின் கீழ் மாணவர் ஒருவருக்கு ரூ. 10/– வழங்கப்படுகிறது. சான்றிதழுக்கான வடிவமைப்பு மாநிலத்திலிருந்து அனுப்பிவைக்கப்படும்.

மேலும் பெற்றோர்களின் ஒப்புதலுடன் மட்டுமே அகப்பயிற்சிக்கு மாணவர்களை வெளியே அழைத்துச் செல்லவேண்டும். அகப்பயிற்சிக்கு அழைத்து செல்லும் போது மாணவர்களுடன் ஆசிரியர்களும் உடன் செல்ல வேண்டும், மேலும் மாணவர்கள் பாதுகாப்பில் சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள் தனிகவனம் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு,

1. அகப்பயிற்சிக்கான வழிக்காட்டு நெறிமுறைகள்
2. அகப்பயிற்சி கையேடு

// ஓம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
சார்ந்த அரசு மேல் நிலை பள்ளி தலைமை ஆசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.

1. நகரவை (பெ) மே.நி.பள்ளி, தோட்டப்பாளையம்
2. அ.மே.நி.பள்ளி, பென்னாத்தூர்
3. அ.(பெ).மே.நி.பள்ளி, காட்பாடி
4. அ.மே.நி.பள்ளி, பிரம்மபுரம்
5. அ.(ஆ).மே.நி.பள்ளி, கே.வி.குப்பம்
6. அ.(ஆ),மே.நி.பள்ளி, பொன்னை
7. அரசு முஸ்லிம்.மே.நி.பள்ளி, வேலூர்
8. அ.மே.நி.பள்ளி, கணியம்பாடி
9. அ.மே.நி.பள்ளி, விரிஞ்சிபுரம்
10. அ.(ஆ).மே.நி.பள்ளி, காட்பாடி
11. அ.மே.நி.பள்ளி, விண்ணம்பள்ளி
12. அ.(ஆ).மே.நி.பள்ளி, அணைக்கட்டு
13. அ.(ஆ).மே.நி.பள்ளி, பள்ளிகொண்டா
14. ஈ.வி.ஆர்.என். அ.(பெ).மே.நி.பள்ளி, வேலூர்